# காழிச்சீராம விண்ணகரம்

**செல்வங்களைக் கொடுத்த செம்மல்:** பல இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு கோயில் கொண்டுள்ள எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்து அவர்களை வாழ்வித்தவர் நம் திருமங்கையாழ்வார். இவர் நமக்குப் பல திவ்யதேசங்களைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார். நாம் திவ்யதேசங்களாகிற செல்வங்களைப் பெற்று இப்போதும் மகிழ்கிறோம்.

# ஸ்தலசயனத்துறைவார்

நாம் திவ்யதேசங்களை நினைக்கும் போதெல்லாம் திருமங்கை மன்னனை (ஆழ்வாரை) போற்றாமல் எப்படி இருக்கமுடியும்! திருமங்கையாழ்வார், மற்றவர்களால் செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் சென்றிருக்கிறார்! எப்படிச் சென்றாரோ! எம்பெருமானே வழிகாட்டியாக இருந்து அழைத்துச் சென்றிருக்க வேண்டும். அப்போது நாம் இருந்து ஸேவிக்கவில்லை. இப்போது (அர்ச்சாவதார உருவத்தில் இருக்கும்) திருமங்கையாழ்வார் திருநாங்கூர் திவ்யதேச எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்வதை ஸேவிக்கலாம். இந்த உத்ஸவம் ஒவ்வோராண்டும் தை மாதத்தில் நடைபெறுகிறது. தைமாதத்தை மங்களாசாஸன மாதம் என்றே கூறிவிடலாம். சீர்காழி என்ற சொல்லைக் கேட்டவுடன், இவ்வூருக்கு அருகிலுள்ள குறையலூரில் அவதரித்த செல்வச் செம்மல் நம் கலியன் (திருமங்கையாழ்வார்) தானே நினைவுக்கு வருகிறார்! நெஞ்சையும் கண்ணையும் விட்டகன்றிடாது கலியன் ஆணை ஆணையே.

**தவிட்டுத்தாடாளன்:** திருஞானசம்பந்தர் சைவசமயாசிரியர். இவர் மிகப் பெருமைபெற்று சீர்காழியில் வாழ்ந்த காலம்! திருமங்கையாழ்வார் பரிவாரங்களோடு திவ்யதேச

யாத்திரையாக எழுந்தருளிக் கொண்டிருந்தார். சீர்காழிக்கும் வந்தார். இவரோடு வந்தவர்கள், 'நாலுகவிப் பெருமாள் வந்தார்' 'சிங்க ஏறனைய கலியன் வந்தார்,' என்பது போன்ற விருதுகளைக் கூறிக்கொண்டு வந்தார்கள். 'ஞானசம்பந்தர் இருக்கும் இவ்விடத்தில் பிறர்விருதுகளை முழங்கிக்கொண்டு செல்லக்கூடாது' என்று ஞான சம்பந்தரின் சீடர்கள் தடுத்து விட்டார்கள். ஆழ்வார் 'ஞானசம்பந்தரோடு வாதம் செய்யத்தொடங்கினர். உமது கவித்திறனைக்காட்ட ஒரு பாடல் பாடும், என்று சம்பந்தர் கூறி 'ஒரு குறள்' என்று தொடங்கிக் கொடுத்தார். 'ஒரு குறளாய்' என்று ஆரம்பித்து திரிவிக்கிரமன் வரலாற்றைப் பாடிமுடித்தார். ஞானசம்பந்தர் ஆழ்வாரின் கவித்திறனை வியந்து 'உமக்கு இந்த விருதுகள் தகும்' என்று பாராட்டித் தன்னிடம் இருந்த வேலினை காணிக்கையாக அளித்தார்; பிறகு உபசரித்து வழியனுப்பினர்.

ஆழ்வார் ஞானசம்பந்தரோடு வாதப்போர்செய்யச் செல்லும்போது, வைணவத்தில் ஊன்றியவளும், ஆழ்வாரிடம் பக்தி கொண்டவளுமான வயது முதிர்ந்த பெண்மணி ஒருத்தியைக்கண்டார். அவள் தன் வீட்டில் தவிட்டுப் பானையில் வைத்துப் பூஜித்திருந்த தாடாளப்பெருமாளை ஆழ்வாருக்கு அளித்து வாழ்த்தி வழி அனுப்பினள். ஆழ்வார் அந்தப் பெருமாளை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு சென்றுதான் ஞானசம்பந்தரை வாதப்போரில் வென்றார். பிறகு இவரைச் சீர்காழியில் பிரதிஷ்டை செய்து, சீர்காழியைக் காழிச்சீராம விண்ணகரம் ஆக்கினர். இந்தத் தவிட்டுத் தாடாளன் இப்போதும் மூலவரோடு மிகச்சின்னவராக எழுந்தருளி இருக்கிறார் என்றும் கூறுகிறார்கள். ஜ்யேஷ்டாபிஷேகத்தன்றே இவரை ஸேவிக்க முடியுமாம்! இந்த வரலாறு இன்றும் தாடாளன் ஸன்னிதி விமானத்தில் சிற்பமாகச் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

**தெட்டபழம் போடு!** எம்பெருமானார் (ஸ்ரீராமானுஜர்) 'ஒருகுறளாய்' என்ற இப்பதிகத்தை காலக்ஷேபமாக ஒரு

சமயம் ஸாதித்தார். இதில் 'தெட்டபழம்...சேர்மினீரே' என்று ஓரடி வருகிறது. தெட்டபழம் என்றால் என்னவென்று ஒரு சீடர் கேட்டார். தெட்ட என்ற சொல்லுக்குரிய பொருளைப் பிறகு கூறுவோம் என்றருளிச் செய்தார். பிறகு ஒருநாள் இந்தத் திவ்யதேசத்தின் சோலை வழியே வந்தார். அப்போது சிலசிறுவர்கள் மரத்தின் மீதேறி நாவற்கனிகளைப் பறித்துக் கொண்டிருந்தனர். கீழே இருக்கும் சிறுவர் தெட்டபழமாகப் பறித்துப்போடு என்றனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீராமாநுஜர் சிறுவர்களிடம் சென்றார். 'பிள்ளாய்! தெட்டபழம் என்றால் என்ன? என்று கேட்டார். 'கனியப் பழுத்தபழம்' என்று சிறுவர்கள் கூறினர். எம்பெருமானார் திருவுள்ளமுவந்தார். இது ஒரு திசைச்சொல் போலும்! என்று எம்பெருமானார் அருளிச் செய்ததாகப் பெரியோர் கூறுவர்.

**சிரஞ்ஜீவி உரோமசர்.** மற்றவர்களின் ஆயுளைக் காட்டிலும் பிரமனுக்கு ஆயுள் மிகுதி. இதனால் பிரமன் செருக்குண்டிருந்தான். உரோமச முனிவர் இவனைவிட நீண்ட ஆயுளைப்பெற்ற வகையில் பிரமனின் கர்வத்தை அடக்கினார்.

உடல் முழுதும் அடர்ந்த மயிர்களையுடைய முனிவரே உரோமசர். இவர் உலகில் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்து பகவானை தியானிக்க விரும்பினார். ஒரு புண்ணிய நதிக்கரையில் கடுந்தவம் புரிந்தார். ஸ்ரீமந்நாராயணன் முனிவரின் எதிரில் தோன்றினான்; 'முனிவரே! நீர் விரும்புவதைக்கேளும்' என்றான். 'இந்த உடம்போடு உன்னை வெகு நாட்கள் வழிபட வேண்டும்; பல்லாயிரம் பிரம்மாக்களின் ஆயுளை எனக்குக் கொடுத்தருள்க' என்று முனிவர் வேண்டினார். முனிவரே! பிரம்மாவின் நீண்ட ஆயுளைப்பற்றி உமக்குத்தெரியுமா; ஒரு பிரம்மாவின் காலம் முடிந்தால் உம்முடைய உடலிலிருந்து ஒரு உரோமம் கீழே விழும். உமது சரீரத்திலிருந்து எல்லா உரோமங்களும் (மயிர்களும்) கீழே விழும் வரை நீர் வாழலாம்' என்று பகவானும் வரம் கொடுத்துச் சென்றான். 'சதுர்முகனின் ஆயுஸ்ஸின் மிகுதி

யாதுண்டான தூர்மானத்தை ஆசாரப்ரதனை ரோமச பகவான் தவிர்த்து அருளினான்' என்று பெரியவாச்சான் பிள்ளை அருளுகிறார். இதையே திருமங்கையாழ்வார் 'நான்முகன் நாள் மிகைத்தருக்கை, இருக்கு வாய்மை நலமிகு சீர் உரோமசனால் நவிற்றியவர் (தாடாளன்) எந்தை' என்றார்.

**மீளாத ஊராம் அவ்விண்ணகரம்:** இன்பம் தரும் உலகங்கள் இரண்டு. சுவர்க்கம் ஒன்று; மற்றொன்று பரமபதம். சுவர்க்க இன்பம் நிலையானது அன்று; பரமபதத்தில் பகவானை அடைந்து அநுபவிக்கும் இன்பமே நிலையானது. சுவர்க்கம் சென்றவர் மீண்டும் பூமிக்குவருவர்; பரமபதம் சென்றவர் திரும்பார். உடலைப் பெற்ற வாய்ப்பைக் கொண்டு நல்வினை செய்யவேண்டும்; ஆனால் பாவங்களையே செய்கிறோம். இப்பிறவியில் நன்மை தீமைகளைச் செய்கிறோம்; இவை பல பிறவியில் தொடர்ந்து வந்து உயிருக்கு தன்மைகளை அளிக்கின்றன. அதற்காக மீண்டும் பூமியில் பிறக்கிறோம். இவ்விரு வினைகளையும் வென்றால் என்ன? வெல்லமுடியாதா? காழிச்சீராம விண்ணகரம் (சீர்காழி தாடாளன் ஸன்னிதி) செல்லுங்கள் இங்குச் சென்று ஒரு முறையேனும் தாடாளனை வணங்கினால்தான் மோட்சம் கிடைக்கும். திருவரங்கத்தில் மிக்க ஈடுபாடுகொண்ட பிள்ளைப்பெருமாள் ஐயங்காருக்கு எல்லா ஊர்களும் அரங்கமாகவே தோன்றும். எந்த எம்பெருமானைச் சொன்னாலும் அவ்வுரை ஆராமம் சூழ்ந்த அரங்கனையே சேரும் என்று திருவுள்ளம். அதனால் தொல்லரங்கர் சீராம விண்ணகரம்' என்றார். ஸ்ரீராமன் இருப்பதால் இவ்வூர் (சீர்காழி) சீராம விண்ணகரம் என்று பெயர் பெற்றதாகவும் கூறுவார்கள். தாடாளன் ஸன்னிதிக்குச் செல்லுங்கள்; அவனை வணங்குங்கள்.

**செல்லுந்தொறு முயிர்ப்பின் செல்லுமிருவினையை**
**வெல்லுமுபாயம் விரும்புவீர்— தொல்லரங்கர்**
**சீராம விண்ணகரம் சேர்மின், பின்மீளாத**
**ஊராம் அவ்விண்ணகர் உண்டு.**